இன்று – முத்தமிழறிஞர் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

ஆதிதிராவிடர் நலக்குழுவின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி வேண்டுகோள்!

சென்னை, ஆக.7-

ஆதிதிராவிடர் நலக்குழுவினருக்கு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக்கதை வசன கர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொது வாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று பல பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளான ஆகஸ்ட் 7, வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள "அமைதிப் பேரணி"யில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள், மற்றும் அனைத்து மாவட்டத்திலுள்ள அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களும் மற்றும் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழக ஆட்சி நடைபெற்ற போதெல்லாம், நம் சமுதாய மக்கள் கோரிக்கை வைக்காமலேயே ஆதிதிராவிடர் மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து என்றும் ஆதிதிராவிடர் மனதில் நீங்கா இடம் பெற்ற ஆதிதிராவிடர் சமுதாயத்தின் விடிவெள்ளி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவரது நினைவு நாளான ஆகஸ்ட்-7 அன்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆதிதிராவிடர் நலக்குழு மாநில மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் தத்தமது பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து, மலர்மாலை சூட்டி அவரது நினைவை போற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தொலைதூர ரயில்களில் வழங்கப்படும்

உணவின் தரம் - சுகாதாரம் மேம்படுத்தப்படுமா?

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7 –

தொலைதூர ரயில்களில் வழங்கும் உணவின் தரம் மேம்படுத்தப்பட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு

அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குச் சேவை வழங்கும் தொலைதூர ரயில்களில் வழங்கப்படும் தரம், சுகாதாரம் மற்றும் உணவுச் சேவைகள் குறித்து அரசு ஏதேனும் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதா, அப்படியெனில் அதன் விவரங்களை ஆண்டு வாரியாகத் தெரிவிக்கவும்;

(ஆ) மேற்கூறிய மாநிலத்திலிருந்து புறப்படும் அல்லது இந்த மாநிலத்தின் வழியே கடந்து செல்லும் ரயில்களில், அடிப்படை சமையலறைகளை (Base Kitchens) நவீனப்படுத்தவும், தரக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும், தொழில்நுட்பம் சார்ந்த கண்காணிப்பை அறிமுகப்படுத்தவும் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும் அரசால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

(இ) தெற்கு இரயில்வே மண்டலத்தில் இயக்கப்படும் தொலைதூர ரயில்களில் சுகாதாரமான, சத்தான மற்றும் பாரம்பரிய தென்னிந்திய உணவு வகைகளின்

கிடைப்புத் தன்மையை விரிவுபடுத்த அரசு முன்மொழிகிறதா, அப்படியெனில் அதன் விவரங்கள் யாவை;

(ஈ) ரயிலுக்குள் வழங்கப்படும் உணவுச் சேவைகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பயணிகளின் கருத்துப் பெறும் வழிமுறைகள் மற்றும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

(உ) மேற்கூறிய மாநிலத்தில் தொலைதூர ரயில்களில் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பான, உயர்தரமான மற்றும் மலிவு விலையிலான உணவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக முன்மொழியப்பட்ட அல்லது முன்மொழியப்பட உள்ள அடுத்தடுத்த நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ரயில்வே இணை அமைச்சர் விரிவாகப் பதிலளித்தார்.

மண்ணின் மைந்தர் கலைஞர் நினைவுநாளில் அமைதி ஊர்வலம் நடத்தியும்

நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மகத்தான தலைவருக்கு புகழஞ்சலி செலுத்துவோம்!

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அறிக்கை!

திருவாரூர், ஆக.7.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 வது நினைவு நாளை முன்னிட்டு, ஆகஸ்ட் 7 அந்த மகத்தான மாமனிதருக்கு அமைதி ஊர்வலம் நடத்தியும் , அவரது திருவத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தும் , நலத்திட்ட உதவிகளை வழங்கியும் புகழஞ்சலி செலுத்திட மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவானன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

உலகமெலாம் வாழும் தமிழர்களின் ஒட்டுமொத்த உயர்வுக்காகவும், தமிழ்நாட்டின் புகழுக்கு முழு முதல்

காரணமாகவும் இருந்து, தமிழ்மொழி செம்மொழியாக பட்டொளி வீசி பாறந்திடச்செய்த, உலகம் போற்றும் உத்தராம் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 வது நினைவு நாளை முன்னிட்டு , தமிழ் கூறும் நல் உலகிற்கு கலைஞர் அவர்களை தந்த மாவட்டமாம் திருவாரூர் முழுவதும், ஆகஸ்ட் 7 அன்று அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், மற்றும் வார்டு ,கிளை கழகங்களில் முத்தமிழ் அறிஞரின் நினைவை போற்றும் அமைதி ஊர்வலமும், ஏழை எளிய மக்களின் வாழ்வின் ஏற்றத்திற்காக வாழ்நாள் முழுவதும் போராடிய அந்த உத்தம தலைவரின் நினைவாக ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அந்த மகத்தான மாமனிதருக்கு புகழஞ்சலி செலுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா ஆகியோரின் பல்கலைகழக்கங்களில் கொள்கைப்பாடம் படித்து, நவீன தமிழ்நாட்டை வடிவமைத்த சிற்பி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இந்த நினைவு நாளில், தற்போது தமிழ்நாட்டின் சாபமாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஜன நாயக விரோத ஆட்சியின் முகத்திரையைமக்கள் மன்றத்தில் கிழித்து, விரைவில் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் தலைமையில் பொற்கால ஆட்சி அமைய அனைவரும் சபதம் ஏற்போம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இன்று (ஆகஸ்ட் - 7) முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்!

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மரியாதை - நலத்திட்ட உதவிகள்!

மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் வேண்டுகோள்!

திருப்பூர், ஆக. 7-

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (07.08.2026 வெள்ளிக் கிழமை) திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ் குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழகத்தில் 5 முறை முதலமைச்சராக இருந்த தமிழகத்தின் வளர்ச்சிக்கு உழைத்த நவீன சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன.

கல்வி, சமூகநீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறை களிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிய மக்கள் நலத்

திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம் திருப்பூர் வடக்கு, அவிநாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவீர், மேலும் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை சிறப்பு செய்திடுவோம்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில. மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டில் ஹஜ் மானியம் - முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றும் கண்துடைப்பு நாடகம்

தமிழ்நாடு அரசின் 2026-27 இடைக்கால பட்ஜெட்டில் ஹஜ் மானியத்தை ரூ.25,000-லிருந்து ரூ.35,000-ஆக உயர்த்தியிருப்பதாக அறிவித்து. இதை "முஸ்லிம்களுக்கான மாபெரும் சலுகை" என விஜய் அரசு கட்டமைத்து வருகிறது

உண்மை நிலை என்ன?

1. **செலவு vs மானியம்**: ஒரு முஸ்லிம் அரசு கோட்டா மூலம் ஹஜ் செல்ல ஆகும் செலவு சுமார் ரூ.4,00,000. தனியார் மூலம் ரூ.8,00,000 முதல் ரூ.9,00,000 வரை. இந்த நிலையில் ரூ.35,000 மானியம் என்பது மொத்த செலவில் 8% கூட இல்லை. இது தெளிவான கண்துடைப்பு.
2. **யாருக்கு பயன்?**: இந்த மானியம் தமிழ்நாடு அரசு ஹஜ் கமிட்டி மூலம் செல்லும் சில நூறு பேருக்கு மட்டுமே. தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் செல்லும் 60%க்கும் மேற்பட்டோருக்கு இந்த மானியம் கிடைக்காது.
3. **இது மானியமே இல்லை**: மத்திய அரசு 2018-லேயே ஹஜ் மானியத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டது. இப்போது வழங்கப்படுவது விமான கட்டணத்தை உயர்திவிட்டு, அதிலிருந்து ஒரு சிறு தொகையை திருப்பி தருவதே ஆகும்.
4. **சமூகத்தின் கோரிக்கை இல்லை**: ஹஜ் என்பது "இஸ்திதாஅத்" - பொருளாதார தகுதி உள்ளவர்களுக்கான இஸ்லாமிய கடமை. "எங்களுக்கு மானியம் தாருங்கள்" என்று முஸ்லிம் சமூகம் ஒருபோதும் கேட்டதில்லை. இந்த மானியத்தை நம்பி யாரும் ஹஜ் பயணம் மேற்கொள்வதில்லை.

எங்களது கேள்வி:

முழு பட்ஜெட்டிலும் முஸ்லிம் சமூகத்திற்கு ஹஜ் மானியம் தவிர வேறு என்ன சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது?

வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, வக்ஃப் சொத்து பாதுகாப்பு, சிறுபான்மை நலத்துறை நிதி - இவை எதிலும் குறிப்பிடத்தக்க அறிவிப்பு இல்லை.

ஆனால் ரூ.10,000 மட்டும் உயர்த்தி கொடுத்துவிட்டு "முஸ்லிம்களுக்கு மட்டும் சலுகை" என பாசிச சக்திகள் கதறவும், "நாங்கள் பெரிய சலுகை தந்தோம்" என அரசு விளம்பரம் செய்யவும் மட்டும் இந்த அறிவிப்பு பயன்படுகிறது.

எனவே நடிகர் விஜய் அரசு இந்த கண்துடைப்பு மானிய நாடகத்தை கைவிட்டுவிட்டு, முஸ்லிம் சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளான கல்வி, வேலைவாய்ப்பு, வக்ஃப் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

சைதை சாதிக்
(கழக செய்தி தொடர்பாளர்)

திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் தாராபுரத்தில்

முத்தமிழறிஞர் கலைஞரின் 8ம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி, திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், ஆக. 7–

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் இன்று (7ம் தேதி) இன்று தாராபுரத்தில் மாபெரும் அமைதிப் பேரணி மற்றும் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், மகளிர் அணி துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழத்தினர் அனைவரும் பங்கேற்றிட வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு : தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு கொள்கையை நெஞ்சில் ஏந்தி, பேரறிஞர் அண்ணா அவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தி.மு.கழகத்தின் கொள்கையை நெஞ்சில் பதிய வைத்து தமிழ்நாட்டு முன்னேற்றத் திற்காக, தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அற்பணித்த திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக வழி வகுத்திட்டார். கலைஞர் அவர்களின் திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு ஏன் இந்தியாவிற்கே முன்னோடித் திட்டங்களாக திகழ்ந்தன. குறிப்பாக கண்ணொளி வழங்கும் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், இரவலர் மறு வாழ்வுத் திட்டம், மன்னர் மானியம் ஒழிப்புத் திட்டம், வங்கிகள், பேருந்துகள் தேசிய உடமை ஆக்கும் திட்டம், மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணத் திட்டம், சுதந்திரத் திருநாளில் மாநில முதல்வர்களே தேசிய கொடியை ஏற்றி வைக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தார், பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம், சத்துணவில் முட்டை, பெண்களுக்கு உள்ளாட்சியில் இடஒதுக்கீடு, அரசு வேலைவாய்பில் பெண்களுக்கு முன்னுரிமை, மகளிர் சுய உதவிக்குழுக்கள், திருமண நிதி உதவித் திட்டம், மகப்பேறு நிதி உதவித் திட்டம், ஏழை எளிய விவசாயிகளுக்கு இலவச நிலம், இலவச மின்சாரம், விவசாயி களுக்கு கூட்டுறவு கடன் ரத்து, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய், ரேஷன் கடைகளில் 10 வகையான மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டம், அண்ணா நூற்றாண்டு நூலகம், புதிய தலைமைச் செயலகம், அருந்ததியினர், இஸ்லாமியர்களுக்கு உள் ஒதுக்கீடு, மருத்துவம் உள்ளிட்ட உயர் படிப்புகளில் நுழைவுத் தேர்வு ரத்து இப்படி தமிழ்நாட்டிற்கு செய்த திட்டங்களை,

தீட்டியத் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

குறிப்பாக கலைஞர் அவர்கள் 14 வயது முதல் 95 வயது உரை கடைசி மூச்சு உள்ள வரை உழைத்த உத்தமத் தலைவர் – தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் உடலால் விட்டு 7.8.2018 அன்று பிரிந்தார். நம்மை விட்டு உடலால் பிரிந்தாலும் நம் உள்ளத்தில், ஏன் ஒவ்வொரு தமிழரின் உள்ளத்திலும் என்றென்றும் நிலைத்து நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆகஸ்ட் 7ம் தேதி 8ம் ஆண்டு நினைவு நாள் ஆகும். கலைஞர்அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, 7.8.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், மகளிர் அணி துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் (மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன்) ஆகிய எனது முன்னிலையில் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெறுகின்றது.

எனவே இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக , கிளைக் கழக செயலாளர், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னணித் தோழர்கள் அனைவரும் நமது அரசியல் ஆசான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதி பேரணி மற்றும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியில் பங்கேற்று, கலைஞர் அவர்களின் புகழ்க்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் அனைவரும் தவறாமல் வருகை தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆலப்பாக்கம் கு.சண்முகம்
ஆகஸ்ட் 7 (2023)

1975ஆம் ஆண்டு ஆலப்பாக்கம் கிளைக் கழக பிரதிநிதியாகவும் பின்னர், கிளைச் செயலாளர், மூன்று முறை வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர், மதுரவாயல் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு கழகப் பொறுப்புகள் வகித்து தனது பகுதியில் கழகம் வளர்த்தவர்.

2006ல் மதுரவாயல் நகர்மன்றத் தலைவராகவும், 2022ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி சுகாதார நிலைக்குழு உறுப்பினராகவும், சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

2023ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளன்று நடைபெற்ற அமைதி பேரணியில் கலந்து கொண்ட வழியிலேயே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பில் மறைவெய்தியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.